# ஏப்ரல் - 24 - புதன்

தூய சிக்மரிங்கன்

ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள்! அவர்தம் பெயரைச் சொல்லி வழிபடுங்கள்! திபா. 105:1

## முதல் வாசகம் : திருத்தூதர் பணி 3 : 1 - 10

ஒருநாள் இறைவேண்டல் செய்யும் நேரமாகிய பிற்பகல் மூன்று மணிக்குப் பேதுருவும் யோவானும் கோவிலுக்குச் சென்றனர். அப்பொழுது பிறவியிலேயே கால் ஊனமுற்றிருந்த ஒருவரைச் சிலர் சுமந்துக் கொண்டு வந்தனர். கோவிலுக்குள் செல்பவரிடம் பிச்சைக் கேட்பதற்காக அவரை நாள்தோறும் கோவிலின் "அழகுவாயில்" என்னுமிடத்தில் வைப்பர். அவர் கோவிலுக்குள் சென்று கொண்டிருந்த பேதுருவையும் யோவானையும் கண்டு பிச்சை கேட்டார். பேதுருவும் யோவானும் அவரை உற்றுப்பார்த்து, "எங்களைப் பார்" என்று கூறினர். அவர், ஏதாவது கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்புடன் அவர்களை ஆவலுடன் நோக்கினார். பேதுரு அவரிடம், "வெள்ளியும் பொன்னும் என்னிடமில்லை என்னிடம் உள்ளதை உமக்குக் கொடுக்கிறேன். நாசரேத்து இயேசு கிறிஸ்துவின் பெயரால் எழுந்து நடந்திடும்" என்று கூறி, அவரது வலக்கையைப் பற்றிப் பிடித்துத் தூக்கிவிட்டார்கள். உடனே அவரது காலடிகளும் கணுக்கால்களும் வலுவடைந்தன. அவர் குதித் தெழுந்து நடக்கத் தொடங்கினார் துள்ளி நடந்து, கடவுளைப் போற்றியவாறே அவர்களோடு கோவிலுக்குள் சென்றார். அவர் நடப்பதையும் கடவுளைப் போற்றுவதையும் மக்களனைவரும் கண்டனர். 'அவர்கள் எல்லாரும் கோவிலின் அழகு வாயில் அருகே பிச்சைக்கேட்டுக் கொண்டிருந்தவர் இவரே என்று அறிந்து கொண்டனர் நடந்ததைப் பார்த்துத் திகைப்பு மிகுந்தவராய் மெய்ம் மறந்து நின்றனர்.

**பதில்பாடல்:** ஆண்டவரைத் தேடுவோரின் இதயம் அக்களிப்பதாக.

## நற்செய்தி : லூக்கா 24 : 13 : 35

வாரத்தின் முதல் நாள் சீடர்களுள் இருவர் எருசலேமிலிருந்து ஏறத்தாழ பதினொரு கிலோ மீட்டர் தொலையிலுள்ள ஓர் ஊருக்குச் சென்று கொண்டிருந்தனர். அவ்வூரின் பெயர் எம்மாவு. அவர்கள் இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் குறித்து ஒருவரோடு ஒருவர் உரையாடிக் கொண்டே சென்றார்கள். இப்படி அவர்கள் உரையாடிக் கொண்டும் வினவிக்கொண்டும் சென்றபோது, இயேசு நெருங்கி வந்து அவர்களோடு நடந்து சென்றார். ஆனால் அவர் யார் என்று அறிந்து உணர முடியாதவாறு அவர்கள் கண்கள் மறைக்கப்பட்டிருந்தன. அவர் அவர்களை நோக்கி, "வழிநெடுகிலும் நீங்கள் ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டிருப்பது என்ன?" என்று கேட்டார். அவர்கள் முகவாட்டத்தோடு நின்றார்கள். அவர்களுள் கிளயோப்பா என்னும் பெயருடைய ஒருவர் அவரிடம் மறுமொழியாக, "எருசலேமில் தங்கியிருப்பவர்களுள் உமக்குமட்டும்தான் இந்நாள்களில் நிகழ்ந்தவை தெரியாதோ!" என்றார். அதற்கு அவர் அவர்களிடம், "என்ன நிகழ்ந்தது?" என்று கேட்டார். அவர்கள் அவரிடம், "நாசரேத்து இயேசுவைப் பற்றியேதான் பேசுகின்றோம். அவர் கடவுளுக்கும் மக்கள் எல்லாருக்கும் முன்பாகச் சொல்லிலும் செயலிலும் வல்ல இறைவாக்கினராகத் திகழ்ந்தார். அவர் இஸ்ரயேலை மீட்கப் போகிறார் என்று நாங்கள் எதிர்பார்த்து இருந்தோம். ஆனால் தலைமைக் குருக்களும் ஆட்சியாளர்களும் அவருக்கு மரணதண்டனை விதித்துச் சிலுவையில் அறைந்தார்கள். இவையெல்லாம் நிகழ்ந்து இன்றோடு மூன்று நாள்கள் ஆகின்றன. ஆனால் இன்று எங்களைச் சேர்ந்த பெண்களுள் சிலர் எங்களை மலைப்புக்கு உள்ளாக்கினர் அவர்கள் விடியற்காலையில் கல்லறைக்குச் சென்றார்கள் அவருடைய உடலைக் காணாது திரும்பி வந்து, வானதூதர்களைக் கண்டதாகவும் இயேசு உயிரோடியிருக்கிறார் என்று அவர்கள் கூறியதாகவும் சொன்னார்கள். எங்களோடு இருந்தவர்களுள் சிலரும் கல்லறைக்குச் சென்று, அப்பெண்கள் சொன்னவாறே இருக்கக் கண்டனர். ஆனால் அவர்கள் இயேசுவைக் காணவில்லை" என்றார்கள். இயேசு அவர்களை நோக்கி, "அறிவிலிகளே! இறைவாக்கினர்கள் உரைத்த எல்லாவற்றையும் நம்ப இயலாத மந்த உள்ளத்தினரே! மெசியா தாம் மாட்சி அடைவதற்குமுன் இத்துன்பங்களைப் பட வேண்டுமல்லவா!" என்றார். மேலும் மோசே முதல் இறைவாக்கினர்வரை அனைவரின் நூல்களிலும் தம்மைக் குறித்து எழுதப்பட்ட யாவற்றையும் அவர் அவர்களுக்கு விளக்கினார். அவர்கள் தாங்கள் போக வேண்டிய ஊரை நெருங்கி வந்தார்கள். அவரோ அதற்கு அப்பால் போகிறவர் போலக் காட்டிக் கொண்டார். அவர்கள் அவரிடம், "எங்களோடு தங்கும் ஏனெனில் மாலை நேரம் ஆயிற்று பொழுதும் போயிற்று" என்று கூறிக் கட்டாயப்படுத்தி அவரை இணங்கவைத்தார்கள். அவர் அங்கு தங்குமாறு அவர்களோடு சென்றார். அவர்களோடு அவர் பந்தியில் அமர்ந்திருந்த போது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றி, பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டுகொண்டார்கள். உடனே அவர் அவர்களிடமிருந்து மறைந்துபோனார். அப்போது, அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி, "வழியிலே அவர் நம்மோடு பேசி, மறைநூலை விளக்கும்போது நம் உள்ளம் பற்றி எரியவில்லையா?" என்று பேசிக் கொண்டார்கள். அந்நேரமே அவர்கள் புறப்பட்டு எருசலேமுக்குத் திரும்பிப் போனார்கள். அங்கே பதினொருவரும் அவர்களோடு இருந்தவர்களும் குழுமியிருக்கக் கண்டார்கள். அங்கிருந்தவர்கள், "ஆண்டவர் உண்மையாகவே உயிருடன் எழுப்பப்பட்டார். அவர் சீமோனுக்குத் தோற்றம் அளித்துள்ளார்" என்று சொன்னார்கள். அவர்கள் வழியில் நிகழ்ந்தவற்றையும் அவர் அப்பத்தைப் பிட்டுக் கொடுக்கும்போது அவரைக் கண்டுணர்ந்து கொண்டதையும் அங்கிருந்தவர்களுக்கு எடுத்துரைத்தார்கள்.

**தியானம்:** உத்தான விழாவின் பின்வரும் திருத்தூதர் பணி வாசகங்கள் ஆரம்பகால திருச்சபையின் செயற்பாடுகளைக் காட்டுவதால், திருத்தூதர் பணி நூலை "பரிசுத்த ஆவியானவரது செயற்பாடுகளை விபரிக்கின்ற வரலாற்று நூல்" என்று கூறினால் மிகையாகாது. இறைமகன் இயேசு எம்மாவுஸ் வழிப்பயணத்தில் அன்னியராக தமது அன்புச்சீடர்களோடு வழிநடந்தது மட்டுமல்ல, சீடர்களது உள்ளத்தில் தம்மைப்பற்றிய உணர்வை உருவாக்கியது போன்று, எங்களோடும் திருப்பலி, இறைவார்த்தைகள் வழியாக உறவாடுகின்றார். அவரது வல்லசெயல்களையும், அன்பையும் சுவைபார்த்திட தமது திருவிருந்துப்பந்திக்கு எம்மை அனுதினமும் அழைக்கின்றார். பரிசுத்த திருப்பலிகளில் பங்கெடுக்கும்பொழுது, இயேசுவோடு பயணிக்கும் எம்மாவு அனுபவத்தை உணர்ந்துள்ளோமா? சிந்திக்க நற்செய்தி அழைக்கின்றது. நற்செய்தியில் எம்மாவுஸ் சீடர்களும், அப்பத்தைப்பிட்டு இறைவார்த்தையை விளக்குமளவும் இயேசுவை யாரென அறிந்து கொள்ளாததனை அவதானிக்கலாம். முதலில், இயேசு நற்செய்தியை போதிக்கும்போது, அவர்களின் இதயம் மட்டும் புரிந்து கொண்டதெனினும் (லுக்கா 24:32) அப்பத்துண்டுகளை பங்கிடும்வரை அவர்களது ஊனக்கண்களால் இயேசுவின் உண்மையான உருவத்தை (லுக்கா 24:30-31) கண்டுபிடிக்க முடியவில்லை. இறைமகன் கிறிஸ்து தம்மைக் குறித்து அறிகின்ற வாஞ்சையை எமதுள்ளத்தின் ஆழத்தில் அதிகமதிகமாக உருவாக்க விரும்புகின்றார் என்ற உண்மை இறை வார்த்தையை நாம் வாசிக்கும் ஒவ்வொரு தடவைகளிலோ, அல்லது திருப்பலியில் நாம் பங்கெடுக்கும் வேளையிலோ, இறைமகன் இயேசுவோடு ஒன்றிணைக்கப்பட அழைக்கப்படுகிறோம். பரிசுத்த திருப்பலியில நாம் எமதுள்ளத்தை இயேசுவிற்காக திறந்து வைத்தால், உயிர்த்தெழுந்த இயேசு, சாதாராண அப்பத் துண்டாக அல்லாமல், அப்ப இரச வடிவினில் நம்மிடையே இருப்பதை உணர்ந்து கொள்ளலாம். பரிசுத்த நற்கருணையில் இயேசு இருப்பதை ஒவ்வொரு பரிசுத்த திருப்பலி வழியாக நாம் நினைவுகூர்ந்து, எமது அந்தரங்கத்தில் இயேசுவோடு ஒன்றிணைய எப்போதும் தயாராக இருப்போம். இறைமகன் இயேசு எம்மை எமது பாவ வாழ்விலிருந்து தூக்கியெடுத்து பரலோக தகப்பனது அன்பினாலும், கிருபையினாலும் நிரப்புவதற்கு தயாராக இருக்கின்றார் என்ற உண்மையை உணர்ந்து விசுவசிப்போம்.